RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22446

OPEN ACCESS

# அயலகத் தமிழ் இதழ்களில் தேசிய இனச்சிக்கல்

**சு. மகேஸ்வரி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அன்னை வேளாங்கண்ணி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தஞ்சாவூர்-613007, தமிழ்நாடு, இந்தியா

# National Ethnic Problem in Foreign Tamil Magazines

**S. Maheswari** [a, *]

[a] Department of Tamil, Annai Vailankanni Arts and Science College, Thanjavur-613007, Tamil Nadu, India

* Corresponding Author: atheetha02@gmail.com

Received: 13-06-2022
Revised: 11-09-2022
Accepted: 27-09-2022
Published: 19-10-2022

Check for updates

**ABSTRACT**

Tamils have been constantly trying and struggling to maintain their presence in foreign countries. They published a large number of Tamil magazines in the countries they went to. When they try to connect with the political and socioeconomic environment there, they sometimes encounter a compatible environment, and many times they do not. Tamils, who have their own identity, are subjected to various forms of ethnic problems in the neighbourhood even after migrating due to the war situation in their motherland. As hard as it is for immigrants to maintain their presence in foreign countries, it is as difficult to live through the national oppressions there and unite the Tamils there. They have started magazines, one of the artistic activities of the Tamil people, and are also using it as a platform to bring together the global Tamils and bring the problems faced there to the world. This article brings to light the lives of foreign Tamils by bringing out the foreign Tamil journals, which are constantly recording the memories of their motherland where they have escaped to foreign countries and are unable to lead a free life.

**Keywords:** Magazines, Tamilness, Nationality, Ethnic problem, War, Contradiction

## முன்னுரை

கிமு 30-ஆம் நூற்றாண்டில் பாண்டியர்கள் உலகத்தின் கிழக்குப் பகுதியையும், மேற்குப் பகுதியையும் இணைக்கும் விதமாக, கடல் பயணங்களை மேற்கொண்டனர். சங்க காலம் முதலே வணிக நோக்கங்களுக்காகக் கடல் தாண்டி தமிழர்கள் மேற்கொண்ட பயணம் பிற்பாடு கல்வி, தொழில், வேலைவாய்ப்பு, போர்ச்சூழல் என விரிந்துள்ளது. குறிப்பாக போர்ச் சூழலினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் மலேசியா, சிங்கப்பூர், கனடா, ஆஸ்திரேலியா, பிஜித் தீவுகள், நார்வே, டென்மார்க், ஜெர்மனி, பிரான்ஸ், பிரித்தானியா, மொரிஷியஸ், நெதர்லாந்து, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தனர். புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் அங்கு பல்வேறு வகையிலான சிக்கல்களைச் சந்தித்து வாழ வேண்டியுள்ளது.

அயல்நாடுகளில் தங்களின் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள தொடர்ச்சியாகத் தமிழர்கள் முயன்றும் போராடியும் வருகின்றனர். தாங்கள் சென்ற நாடுகளில் எல்லாம் பெருமளவு தமிழ் இதழ்களை வெளியிட்டார்கள். அங்குள்ள அரசியல், சமூகப் பொருளாதாரச் சூழலோடு இணைய முற்படும் பொழுது, சிலசமயங்களில் இணங்கிப் போகின்ற சூழலும், பெருவாரியான சமயங்களில் இணக்கம் கொள்ள இயலாத புதிய சூழ்நிலைகளையும் எதிர்கொள்கின்றனர். அவற்றையெல்லாம் தங்கள் இதழ்களில் தமிழர்கள் பதிவிடுகின்றார்கள். அயலகத்தில் வெளிவருகின்ற தமிழ் இதழ்களின்

பதிவுகள் யாவும் அங்குள்ள தமிழர்களின் வாழ்வியலை எடுத்தியம்புகின்றன. தமிழர்களின் இனச்சிக்கல் கூர்மையடைந்த பொழுதெல்லாம், அயலகத் தமிழ் இதழ்களில் தமிழர்கள் அது குறித்த செய்திகளை எவ்விதம் பதிவு செய்துள்ளனர் என்பதை இந்தக்கட்டுரை வெளிப்படுத்துகின்றது.

## தேசிய இனம் வரையறை

இனம் எனும் சொல்லுக்குத் தமிழ் அகராதி 'குலம், கூட்டம்' என்னும் பொருளைத் தருகின்றது. ஓர் இனக்குழு மூலத்திலிருந்து தோன்றிய பழங்குடிகள் பொதுமொழி அடிப்படையில் இனமாக ஒருங்கிணைந்து வளர்ந்து, காலவளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் பொதுமொழியும், பொதுப்பண்பாடும் கொண்டு நிலைத்துவிட்ட சமூகம் ஒரு தேசிய இனமாகும்.

இனம் என்பது இரண்டு வளர்ச்சி நிலைபெறுகிறது. முதல் கட்டம் மரபு (Race) அடுத்த கட்டம் தேசிய இனம் (Nationality). ஒரு மரபு இனம் பல தேசிய இனங்களில் கலந்துவிடும் வாய்ப்பு உண்டு. ஒரு தேசியஇனத்தில் குறிப்பாக ஒரு மூல மரபினமும், அதனோடு கலந்துவிட்ட வேறு மரபினங்களும் இருக்கலாம். பல மரபினங்கள் கலந்தும் தேசிய இனம் உருவாகி இருக்கலாம். தமிழர் இனம் மரபினம்.

இப்படியான தனக்கெனத் தனி அடையாளம் கொண்ட தமிழினம் தனது தாய் மண்ணில் போர்ச்சூழல் காரணமாகப் புலம்பெயர்ந்து சென்றபிறகும் அயலகத்தில் பல்வேறு வடிவங்களில் இனச்சிக்கல்களுக்கு உள்ளாகின்றது. அயல்நாடுகளில் எந்த அளவிற்குப் புலம்பெயர்ந்தவர்கள் தங்கள் இருப்பைத் தக்கவைத்துக்கொள்வது கடினமானதோ அதே அளவிற்குக் கடினமானது அங்குள்ள தேசிய இனம் சார்ந்த ஒடுக்குமுறைகளைக் கடந்து வாழ்வதும் ஆகும்.

## தேசிய இனவாதத்தின் தோற்றம்

உலகெங்கிலும் ஒரு தேசியஇனம் தன்னிடம் அடைக்கலம் கருதி வந்த பிற இனமக்களைக் காலங்காலமாகவே தனக்குக் கீழாகவே பார்ப்பதும் நடத்துவதும் நிகழ்கிறது. தமிழர்கள் இவ்வாறான தேசிய இனச்சிக்கலைப் பல்வேறு நாடுகளில் அனுபவித்து வந்துள்ளனர். இரத்தச்சொந்தங்களும், தாய்நாட்டு மக்களும் தாயகத்தில் இனக்கலவரங்களால் பாதிக்கப்படுகையில், புலம்பெயர் தமிழர்கள் தங்களின் இனப்பற்றுதலை வெளிக்காட்டும் முகமாக அது குறித்த பதிவுகளை இதழ்களில் தொடர்ந்து பதிவுசெய்து வந்துள்ளனர்.

### இலங்கை

இலங்கையில் சுதந்திரத்திற்குப் பிறகு உள்நாட்டில் ஏற்பட்ட பிரச்சனைகளும், இனக்கலவரங்களும் அதன் காரணமாகப் பொது வாழ்க்கையிலும், சொந்த வாழ்க்கையிலும் ஏற்பட்ட கசப்பான ஒவ்வொரு சம்பவமும் சொந்த நாட்டில் வாழ முடியாதென்று புலம்பெயர்ந்து செல்லுவதும், அன்னிய நாடுகளில் நவீன படைப்புகளில் பிரதிபலிக்க ஆரம்பித்தது (Kandhasamy, 2012).

மக்களை காலனித்துவ, நவகாலனித்துவ, ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் தாம் ஆட்சி சுரண்டல் மூலம் செய்யும் நாடுகளில் ஒடுக்குமுறை அடிமைப்படுத்துகின்றனர். வளர்ச்சியடையாத நாடுகள் பொருளாதாரரீதியாகத் தொடர்ந்தும் தங்களில் தங்கியிருப்பதற்காகவும் அந்நாடுகளின் மக்களுக்கிடையில் இன, மத, மொழி ரீதியாக முரண்பாடுகளை உண்டாக்கி அம்மக்களைத் தங்களுக்குள் முட்டி மோத வைக்கின்றன. இலங்கையின் இனப்பிரச்சனை விபத்து போன்றதல்ல. நன்கு திட்டமிட்டு ஆட்சியாளர்களினால் இனங்களுக்குள் முரண்பாடுகளை ஏற்படுத்திப் பிரச்சனைகள் சுரண்டும் முதலாளித்துவப் போக்கிற்கெதிரான தோற்றுவிக்கப்பட்டுள்ளன. கிளர்ச்சிகளைத் தடுக்கும் பொருட்டு முதலாளித்துவம், இனங்கள் மத்தியில் பாகுபாடுகளை ஏற்படுத்தியது.

இம்தியாஸ் அவர்கள் 'சூரியன்' இதழில் டென்மார்க் தமிழ் இலக்கிய அமைப்பு முன்னணியானது இலங்கையில் பெறும் சமாதானப் பேச்சுகளுக்குப் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் புபெயர்ந்து

வாழும் தமிழர்கள் வழங்குகிறார்கள் என்பதை, இலங்கை அரசுக்கும் குறித்த 12 அம்சங்களையும் 'தேசம்' எனும் இலண்டன் இதழில் பதிவு செய்துள்ளது.

அவ்வமைப்பு அனுப்பிய அக்கடிதத்திலுள்ள அம்சங்களுள் சில.

1) யுத்தத்திற்குப் பேச்சுவார்த்தை மூலமான நிரந்தரத்தீர்வு காணப்பட்டு, தீவில் வாழும் அனைத்துச் சமூகங்களும் சமாதானமாக வாழ வேண்டும்.
2) தமது உறவுகளைப் பிரிந்தும், தாம் பிறந்த மண்ணைப் பிரிந்தும் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள் இந்த யுத்தத்தால் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டு உள்ளார்கள்.
3) ஐரோப்பாவில் வெவ்வேறு நிலைகளில் தமிழர் வாழ்ந்தாலும் அவர்கள் தமது தாயகத்து நிகழ்வுகளால் பாதிக்கப்படுகின்றனர்.
4) சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான செயல்பாடுகளால் புலம்பெயர்ந்து வாழ்வோர் இலங்கை அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்து வருகின்றனர். இந்த முக்கியக் காலகட்டத்தில் நம்பிக்கையளிக்கும் செயல்பாடுகள் அவசியம்.
5) நோர்வே போன்ற சர்வதேச அரங்கின் பங்களிப்பு சமாதானத்தை ஏற்படுத்த மிகவும் முக்கியமானது. நோர்வே அரசிற்கு நம் பூரண ஆதரவு இருக்கும் (Sri Rajani, 2002).

மேலும், 'தேசம்' இதழானது இனப்பிரச்சனையின் தோற்றம், அதன் வளர்ச்சி, தாயகத்திற்கு வெளியே ஈழப்போராட்டம் ஏற்படுத்திய தாக்கங்கள், இயக்க - அரச சார்பற்ற அமைப்புகள், சர்வதேச அரங்கில் ஈழப்பிரச்சனையை ஆராய்ந்தது. 2009 மே மாதத்திற்குப் பிறகான நிலையை இலங்கையின் ஞானம் இதழ் இவ்வாறு பதிவிட்டது.

“தமிழ்ப் பிரதேசங்களின் வளமிக்க பிரதேசங்களும் நகர மையங்களும் தென்னிலங்கை சார்ந்த முதலாளித்துவ நிறுவனங்களால் நிரப்பப்படுகின்றன. தமிழர்கள் தங்களது வேலைவாய்ப்புக்காக இந்த நிறுவனங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து வாழ்நாள் கொத்தடிமைகளாக மாறிக்கொண்டுள்ளனர். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் தன்னை மீள் சிந்தனைக்கும் மீள்விசாரணைக்கும் அதன் அடிப்படையிலான மீள்கட்டமைப்பிற்கும் உட்படுத்தப்படுவதன் மூலம்தான் சமகாலத்தில் எதிர்நோக்கும் அரசியல் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் (Sri Rajani, 2002).”

ஈழப்போராட்டத்தின் ஒவ்வொரு நிகழ்விலும், அதன் அவலங்களை, இழப்புகளை, தாக்கங்களை, எதிர்பார்ப்புகளை தமிழ் மக்கள் மனநிலையில் நின்று அயலகத்தில் வெளியான தமிழ் இதழ்கள் தொடர்ந்து எழுதி வந்தன.

## போலந்து

இலங்கை இனப்பிரச்னை யுத்தச்சூழலில் மாட்டிக்கொண்டு, உயிர் தப்ப பல்வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த மக்கள் சென்ற நாட்டிலும் கொடுமைகளை செய்துள்ளது. பதிவு அனுபவித்து உயிருக்கு உத்திரவாதமற்ற நிலையில் வாழ்ந்து வந்ததை 'மரபு' இதழ் ஒன்பது வருடங்களாகப் பிரிந்திருந்த தனது பதினெட்டு வயது மகனின் உருகைக்காகக் காத்திருந்த ஒரு தந்தையும், அவர் போன்ற இன்னும் பலரும் என்று கலங்கித் தேடிய போது, இருபத்திரண்டு பேர் கொண்ட குழு ஒன்று போலந்து, போலந்திலிருந்து ஜெர்மனிக்கு வருவதாகக் குறிப்பிட்ட தாண்டியும் வந்துசேரவில்லை.

ஜெர்மனி எல்லையிலுள்ள நைச (Ncisse) என்னும் நதியைக் கடந்து ஜெர்மனியை அடைய முற்பட்ட போது, ஆற்றின் வேகமுமு, தண்ணீர் மட்டமும் அதிகரித்ததால் பலர் ஆற்றோடு அடித்துச் செல்லப்பட்டனர். இதில் பிழைத்த நால்வருள் இருவர் கிழக்கு ஜெர்மனியிலுள்ள அகதிகள் முகாமில் இருந்தனர். நிறவாதம் உச்சம் அடைந்து, கிராம மக்களின் உதவியுடன் புதிய நாசிகள் அகதிகள் முகாம்களை எதிர்த்துப் பல அகதிகள் கொல்லப்பட்டும், தாக்கப்பட்டும் இன்னமும் இதுபோன்ற சம்பவங்கள் நடக்கின்ற கிழக்கு ஜெர்மனியில் தமிழர்கள் இருவர் கேட்பாரற்றுக் கிடந்தனர்.

அவர்களில் ஒருவர் இலங்கையிலிருந்து தமிழ் முகவர் ஒருவரின் உதவியுடன் புறப்பட்டு இரண்டு வருடங்கள் மாஸ்கோவிலும், பின்லாந்திலும் வசித்தவர் ஆவார். இந்த நிகழ்வு கடந்த 1994

ஆகஸ்ட் 27-ஆம் தேதி பாகிஸ்தான், பங்களாதேஷ் நாட்டவர்களுடன் 12 தமிழர்களும் பயணித்துவருகையில் - ஆற்றைக் கடக்க முற்படுகையில் பலர் இறந்தனர் என்றும், போலந்து நாட்டில் பிற இனத்தவர்கள் உயிரைத் துச்சமாகக் கருதிக்கூட வேறு நாடுகளுக்குச் சென்றுவிடத் துணிந்ததையும் பதிவு செய்துள்ளது 'மரபு' இதழ்.

படகு கவிழ்ந்த விபத்தில் தப்பித்து உயிர் பிழைத்த தமிழர் ஒருவர், "இலங்கையில் தாய், இரண்டு சகோதரிகளை யுத்தத்தினால் பறிகொடுத்தவரின் மற்றொரு சகோதரி மருத்துவமனையில் இவ்வளவு கஷ்டத்துக்கு மத்தியில் உயிர்தப்பி இங்குவந்து சேர்ந்தால் இங்குள்ள பிரச்சனைகளோ பல மடங்கு அதிகம். ஜெர்மனிக்கு வந்து சேரும் தமிழர்கள் இத்தனை இன்னல்களுக்கு மத்தியிலோ வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்?" என்ற கேள்வியை முன்வைத்ததாகவும், அகதிகளான தமிழர்கள் மற்றும் பிற நாட்டவர்கள் தண்ணீருக்குள் அடித்துச் செல்லப்பட்ட போது போலந்து எல்லைப் போலீசார் பார்த்துக் கொண்டே நின்றதாகவும், அவர்களைக் காப்பாற்றுவதற்காக எந்த முயற்சியும் செய்யவில்லை" என்றும் கூறியுள்ளார் (Narenthiran, 1989). இவ்வாறு போலந்து - ஜெர்மன் எல்லையோரம் நடந்த நிகழ்வின் வழியே இனமுரண்பாடு அந்நாட்டில் தலைவிரித்தாடியதைப் பதிவு செய்துள்ளது மரபு இதழ்.

## சுவிட்சர்லாந்து

பிரான்சிலிருந்து வெளிவரும் 'மனிதம்' இதழ் சுவிட்சர்லாந்தில் பேணப்படுகின்ற இனவெறியைப்பற்றித் தனது இரண்டாவது இதழில் பதிவு செய்துள்ளது. நவம்பர் - 4 (1989) அன்று 'தாய்நாட்டுமுன்னணி' தனது அகதி முகாமை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர்.

சுவிட்சர்லாந்தவரே முதன்மையானவர்கள்', 'சுவிஸ் சுவிஸ் நாட்டவர்க்கே', 'ஊத்தைத் தமிழன், ஊத்தைக் கூட்டங்களே வெளியேறு' போன்ற முழக்கங்களை முழங்கிய அகதி முகாமை முற்றுமையிட்டனர் (Kalanidhi Paarvathi, 2002).

முகாமின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொறுக்கினர். அகதிகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளைத் தாக்கினர். இவ்வளவு அட்டகாசங்களும் நடந்து கொண்டிருக்கும் போது கன்ரோன் சுக் போலீசார் பார்வையாளர்போல் வேடிக்கை பார்த்தனர். இவ்வாறான தாக்குதல் நடக்கப்போகிறதெனப் போலீசார் முன்கூட்டியே முகாம் பொறுப்பாளர்களுக்கு எச்சரிக்கையும் செய்துள்ளனர். இச்சம்பவத்தில் போலீசாரின் ஒத்துழைப்பைக் கண்டித்து ஒரு சில கட்சிகள் ஊர்வலத்தை நடத்தினர். சுமார் 500 பேர்வரை இந்த ஊர்வலத்தில் பங்குகொண்டனர். தலைமை போலீஸ் அதிகாரியைப் பதவியிலிருந்து விலகுமாறும் கன்ரோன்சுக் அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரினர்.

## கனடா

கனடாவின் பூர்விக மக்கள் தொடர்ச்சியாக வஞ்சிக்கப்பட்டும் இனத்துவேசத்துக்கு உள்ளாகியும் ஒதுங்குண்ட பிரதேசங்களில் உரிமைகளற்றவர்களாக வாழ்கின்றனர்.

தமிழர்களும் வேலைத் தளங்களிலும் பேருந்துகளிலும் சேவை நிறுவனங்களிலும் தமிழர்கள் பல இடையூறுகளை அனுபவிக்கின்றனர். மாணவர்கள் சிலர் பாரபட்சமாகப் புள்ளிகளைப் பெறுவது முதல் குற்றவியல் குழுக்கள் (Gangs) என்றும் தாழ்வாகக் கூறப்படுவது, இனத்துவேசத்துக்கு உட்படுவது வரையிலான தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர் (Kalanidhi Paarvathi, 2002).

இனமுரண்பாடு மக்களிடத்தில் வன்முறையாக இனப்பிரச்சனை என்ற அளவிற்கு வெளிப்படாத போதும் ஏதேனும் ஒரு வகையில் மென்மையாகத் தமிழர்கள் வாழ்வில் இழையோடிய வண்ணம் இருந்துவருகிறது.

இன்றைய உலகில் நாடுகள் - இனங்களிடையேயான முரண்பாடுகள் காரணமாக, அகதிகளாக மேற்கு நாடுகள் நோக்கி வந்திருப்பவர்கள் தந்து உடலுழைப்பை மிகமிகக் குறைந்த ஊதியத்திற்கு இவர்களிடம் விற்பது. தாய்நாட்டு நிலைமையி ன்கீழ், உத்திரவாதமற்ற ஒரு சூழ்நிலையின்கீழ் வந்த அகதிகள் தஞ்சம் அடைந்த நாடுகளில் அவர்களாலேயே மறுக்கவோ, அனுப்பவோ முடியாதபடி

நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். பொருளாதாரப் பின்புலம், அரசியல் பின்புலம் காரணமாகவே அகதிகளாகக் குறிப்பிட்ட இனமக்கள் மாற்றம் பெறுகின்றனர் என்பதைப் பதிவு செய்துள்ளது 'அறுவை' இதழ் (Kovai Arasu, 1987).

## முடிவுரை

ஒரு மக்கள் கூட்டம் தமக்கெனத் தனித்துவமான மொழி, கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரிய பிரதேசம், பொருளாதாரம் ஆகியவற்றைக் கொண்டுள்ளபோது ஒரு தேசிய இனமாகக் கணிக்கப்படுகிறார்கள். ஒரு தேசிய இனத்தின் தனித்துவப் பண்பு அல்லது உரிமை அதன் சுயநிர்ணய உரிமையாகும். இந்த வரையறைகளுள் முரண்பாடு ஏற்பட்டு, குறிப்பிட்ட இனமக்கள் பாரிய அளவிலான மக்கள் கூட்டத்துடன் கொள்ளும் வாழ்வியல் சூழல்கள் தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் பெருமளவு உள்தென்பதே அயலகத்தில் வெளிவந்த இதழ்களில் காணக்கிடைக்கின்ற ஒருமிய கருத்தாகும்.

## References

Kalanidhi Paarvathi, (2002) Panithinaiyum Norungunda Idhayangalum, Naam Tamilar Pathippagam, Chennai, India.

Kandhasamy, S. (2012) Ayalaga Tamil Ilakkiyam, Chennai, India.

Kovai Arasu, (1987) Naam Arasiyal Kaithikala poruliyal agathikala, Aruvai Veeliyeedu, Chennai, India.

Narenthiran, (1989) Thodarum Enaveri, Manithan, Chennai, India.

Sri Rajani, J. (2002) Samanatham Nokkiya Payanam Desam, Tamil University, Madurai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License